மாலை முரசு

பக்கங்கள் 17+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 18 செவ்வாய்க்கிழமை 01.04.2025 | அதிர்வு 241

## மனித உரிமை ஆணைக்குழு தலையீடு!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞானப் பீட புதுமுக மாணவன் மீதான பகிடிவதை விவகாரம் குறித்து 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# யாழ். பல்கலை புதுமுக மாணவன் மீதான தாக்குதல்: சிரேஷ்ட மாணவர்கள் நால்வருக்கு வகுப்புத் தடை!




யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீடப் புதுமுக மாணவன் ஒருவர் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நான்கு இரண்டாம் வருட சிரேஷ்ட மாணவர்களுக்கு உடனடியாகச் செயற்படும் வகையில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் நிறுவனமயப்படுத்தப்பட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான பீடப் புதுமுக மாணவன் ஒருவர் பகிடிவதை காரணமாக உட்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் 05




# தேர்தல் வழக்குகளில் சட்டமா அதிபர் 2 நீதிமன்றங்களில் 2 வித நிலைப்பாடு

## வழக்குகள் உள்ள சபைகளுக்குத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை உத்தரவு

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் பல கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் அவை தொடர்பான வழக்குகள் இன்று கொழும்பில் உயர்நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் அலை மோதின. இன்று உயர்நீதிமன்றம் அத்தகைய 41 மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்த அதே நேரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் பத்துக்கு மேற்பட்ட மனுக்கள் ஆராயப்பட்டன. 03

# மாகாண சபைத் தேர்தல் இந்த ஆண்டு நடக்காது!

## அறிவித்தது அநுர அரசு



”மாகாண சபைத் தேர்தல் இந்த ஆண்டில் நடத்தப்பட மாட்டாது.”

– இப்படித் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றது அரசு.

இப்போது நடக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுடன் ஆறு மாதங்களுக்குள் மூன்று தேர்தல்கள் நடத்தப்பட்டமையால், இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் 03

# வவுனியாவில் ஆணின் சடலம்

## உருக்குலைந்த நிலையில் மீட்பு



(கி.வசந்தன்)

வவுனியா, இராசேந்திரகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட குளத்தில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் 03

# பட்டலந்த போன்று வெலிக்கடைப் படுகொலையையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் அநுர அரசு

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வலியுறுத்து

(கி.வசந்தன்)

“அநுர அரசு நியாயமாகச் செயற்படுமாக இருந்தால் பட்டலந்த போன்று வெலிக்கடை படுகொலையையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.” – என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு ஊடகங்களுக்குக் கருத்துக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பட்டலந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது இவ்வளவு காலமும் தூசு தட்டாமல் இருந்து ஜே.வி.பி. அரசு ஆட்சிக்கு வந்த பின் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

உண்மையில் அதனை நாம் வரவேற்கின்றோம். அதேநேரம் 1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் கலவரம் ஏற்படுத்தப்பட்டது. அதன் பின்னர் இயக்கங்களுக்குத் தமிழ்




இளைஞர்கள் சாரை சாரையாகச் சென்றனர்.

ஆகவே, ஒரு கேள்வியை இந்த அரசிடம் கேட்ட விரும்புகின்றேன். இதை நாடாளுன்றத்தில் கொண்டு வந்ததைப் போன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் வெலிக்கடைச் சிறையில் காடையர்கள் வெளியில் இருந்து உள்ளே அழைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். உயிரிழந்தவர்களின் உடல்கள் எங்கே புதைக்கப்பட்டது என்பது கூடத் தெரியாமல் இருக்கின்றது. ஆகவே, இந்த அரசு நியாயமாகச் செயற்படுமாக இருந்தால் வெலிக்கடைப் படுகொலையையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

பட்டலந்த பிரச்சினை எல்லாவற்றையும் விட 1983 ஆம் ஆண்டு கலவரம் கூடுதலான இழப்புக்களைச் சந்தித்தது. இது வரலாற்றில் முதன்மையான இடத்தில் உள்ள படுகொலை. இதை அரசு விசாரணைக்குக் கொண்டு வந்து, அதற்கான நீதி, நியாயத்தை வெளிப்படுத்த வேண்டும் என மக்கள் சார்பாகவும், வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட போராளிகள் சார்பாகவும் கோரிக்கையை முன்வைக்கின்றேன்.” – என்றார்.



# மருத்துவர் ஒருவரும் அவரது நண்பரும் ஐஸ் போதைப்பொருளுடன் சிக்கினர்!

ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த மற்றும் உட்கொண்ட வலஸ்முல்ல ஆதார மருத்துவமனையின் மருத்துவர் ஒருவரும் அவரது நண்பரும் கைது செய்யப்பட்டனர் என்று மாத்தறை பிரதேச ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாத்தறை, தீயகஹா பகுதியில் வைத்து குறித்த மருத்துவரிடமிருந்து 400 மில்லிகிராம் ஐஸ் என்ற போதைப் பொருளையும், அவரது நண்பரிடமிருந்து 2100 மில்லிகிராம் ஐஸ் என்ற போதைப்பொருளையும், 180 மில்லிகிராம் ஹெராயினையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேலும், சந்தேகநபர் சம்பவ இடத்துக்கு வந்த சொகுசு கார் மற்றும் அவரது மருத்துவ உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

34 வயதான அவர்கள் இருவரும் கொழும்பில் உள்ள பிரபலமான பாடசாலைகளில் படித்தனர் எனவும், சந்தேகத்துக்குரிய மருத்துவர் 2016 இல் மருத்துவப் பட்டம் பெற்றனர் எனவும் பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

# யாழில் 27 வயதுடைய இளைஞர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது

யாழ்ப்பாணம், ஏழாலை தெற்கு, மயிலங்காடு பகுதியில் 10 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 27 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம்பொலிஸாரால்மேற்கொள்எப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி இளைஞர் ஏற்கனவே ஒரு தடவை போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நிலையில் 6 மாதங்கள் சிறையில் இருந்தவர் என்றும், அந்த வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ளது என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேற்படி இளைஞரின் தாயார் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் போதைப் பொருளுடன் கைதாகி சிறையில் உள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் மேற்படி இளைஞர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாகாண...

நடத்தப்பட மாட்டாது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாணந்துறையில் நடந்த தேர்தல் பேரணியில் பேசிய அவர்,

"அரசு எல்லா நேரங்களிலும் தேர்தல்களை நடத்த முடியாது. வளர்ச்சித் திட்டங்களையும் செயற்படுத்த வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பிறகு, பிரதான தேர்தல்கள் முடிவடையும்.

மாகாண சபைத் தேர்தல்கள் மட்டுமே நடத்தப்படவுள்ளன. சில சட்டங்கள் மாற்றப்பட வேண்டியிருப்பதாலும், நாட்டின் வளர்ச்சிக்கு அதிக அளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாலும் இந்த ஆண்டு அது நடத்தப்படாது." - என்றார்.

### தேர்தல்...

இரண்டு நீதிமன்றங்களிலும் இத்தகைய தேர்தல் ஆட்சேபனை தொடர்பான ரிட் மனுக்களை விசாரணை செய்வதற்கு நியாயாதிக்கம் எந்த மன்றுக்கு உரியது என்பது தொடர்பான சட்டச் சர்ச்சை கவனத்தில் எடுக்கப்பட்டது.

இரண்டு நீதிமன்றங்களிலும் இந்த நியாயாதிக்கம் தொடர்பான விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் முரண்பாடான நிலைப்பாடு எடுத்திருப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டப்பட்டமையை அடுத்து அந்த மன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள தேர்தல் ஆட்சேபனை வழக்குகள் தொடர்பாக, அந்தந்தச் சபைகளுக்கான தேர்தல் நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் முன்னெடுப்பதற்கு ஒரு நாள் தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று உத்தரவு பிறப்பித்தது.

உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் துரைராஜா, மஹிந்த சமயவர்த்தன, சம்பத் விஜயரட்ன ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்குகள் எடுக்கப்பட்டன.

அப்போது தேர்தல் ஆணையத்துக்கு எதிரான ரிட் மனுக்கள் மட்டுமே உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு உட்படும் என்பதைச் சுட்டிக்காட்டிய சட்டமா அதிபர் தரப்பு, இந்த வழக்குகளில் தீர்மானங்களை எடுத்தவர்கள் மாவட்ட ரீதியான தெரிவத்தாட்சி அலுவலர்கள் என்பதால் அவர்களுக்கு எதிரான ரிட் மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட முடியாது, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத்தான் செல்ல வேண்டும் என்ற பூர்வாங்க ஆட்சேபனையை முன்வைத்து வாதிட்டது.

தேர்தல் ஆட்சேபனை வழக்குகளைத் தாக்கல் செய்த தரப்புகள் அந்தக் கருத்தை எதிர் வாதத்தினால் மறுத்தன.

மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் தேர்தல் ஆணையத்தின் பிரதிநிதிகளாகவே செயற்படுவதால் இது தேர்தல் ஆணையத்துக்கு எதிரான வழக்கு, அத்தகைய ரிட் மனுக்கள் உயர்நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பது சட்டத்தில் உள்ள ஏற்பாடு என அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேற்படி சட்டமா அதிபரின் பூர்வாங்க ஆட்சேபனை தொடர்பாக இரண்டு தரப்பினரும் செய்த சட்ட வாதங்கள் தொடர்பான எழுத்து மூல சமர்ப்பணத்தை நாளை புதன்கிழமை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதியரசர்கள் வழக்கை அடுத்த நாள் வியாழக்கிழமைக்கு ஒத்திவைத்தனர்.

இதே சமயம் இளையோரின் வயதை உறுதிப்படுத்தும் பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி தொடர்பாக தேர்தல் திணைக்களம் எடுத்த தீர்மானம் சரியானது, அதில் மாற்றமோ, விட்டுக்கொடுப்போ, இரு தரப்பு இணக்கமோ ஏற்படவில்லை என்பதை சட்டமா அதிபர் தரப்பு இன்று நீதிமன்றத்தில் கோடி காட்டியது. அதனால், இந்த ரிட் மனுக்கள் தொடர்பாக சட்டமா அதிபர் தரப்பு முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனையை உயர் நீதிமன்றம் நிராகரித்தாலும், வழக்குகளில் சர்ச்சைக்குள்ளாகியுள்ள விடயங்கள் தொடர்பில் இணக்கமான தீர்வு கிட்ட வாய்ப்பில்லை என்றும், சம்பந்தப்பட்ட தரப்புகள் வாதாடி, இறுதியில் மன்றின் முடிவை ஏற்க வேண்டியிருக்கும் என்றும் கூறப்பட்டது.

இதேசமயம் இத்தகைய தேர்தல் ஆட்சேபனை வழக்குகள் இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் அதன் பதில் தலைமை நீதியரசர் லபார் மற்றும் நீதியரசர் கே.பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

அச்சமயம் அங்கு ஆஜரான சட்டமா அதிபர் தரப்பு, தேர்தல் ஆணையத்துக்கு எதிரான ரிட் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் மட்டுமே பரிசீலிக்கப்பட முடியும், இந்த நீதிமன்றத்துக்கு அந்த நியாயாதிக்கம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டியது.

அப்போது குறுக்கிட்ட மனுதாரர்கள் தரப்பு, இதற்கு எதிரான தலைகீழான வாதத்தை அதே சமயத்தில் உயர்நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தரப்பு முன்வைப்பதாகச் சுட்டிக்காட்டினர்.

அதனைப் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த விடயத்தில் எந்த நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் உள்ளது என்பதை மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் விட உயர்வான உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு விட்டு, அதன் முடிவைப் பெற்றுக்கொள்வதே பொருத்தமானது எனக் கருதி, தன்னுடைய வழக்கு விசாரணையை அது வரை - நாளை வரை - ஒத்திவைத்தது.

அதுவரையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ரிட் மனுக்கள் தொடர்பான உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தர விட்டது.

மேன்றையீட்டு நீதிமன்றத்தில் இந்த வழக்குகள் நாளை மீண்டும் எடுக்கப்படும் என்றாலும், உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை எதிர்பார்த்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நாளைய விசாரணையை ஓரிரு நாள் தள்ளிப் போடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### வவுனியாவில்...

உருக்குலைந்த நிலையில் இன்று மீட்கப்பட்டுள்ளது என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, இராசேந்திரகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நெளுக்குளம் - நேரியகுளம் வீதியில் உள்ள தம்பனை புளியங்குளம் குளத்தில் சடலம் ஒன்று மிதப்பதாக அயலவர்கள் நெளுக்குளம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலத்துக்கு அருகேயுள்ள வயல் வெளியில் சேட் ஒன்றும் காணப்படுவதுடன், குறித்த சடலம் ஐந்து தொடக்கம் பத்து நாட்களுக்கு மேற்பட்டதாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றது.

தடவியல் பொலிஸாரின் உதவியுடன் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பதில் நீதிவான் த.ஆர்த்தியும் சடலத்தைப் பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மனித உரிமை...**

விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது::-

“யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞானப் பீட புதுமுக மாணவன் மீதான பகிடிவதை” எனும் தலைப்பில் 2025 மார்ச் 31 ஆம் திகதி மற்றும் 2025 ஏப்ரல் 01 ஆம் திகதி பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயமானது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தின் பிரவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்தப் பிரேரணையில் அடிப்படையில் கவனம் செலுத்தியுள்ளது.

1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறு வகையான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டம், பகிடிவதை செய்வதானது இலங்கையின் மிகக் கடுமையான குற்றங்களில் ஒன்றாகவும், பிணை வழங்கப்படாத குற்றமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் பகிடிவதை செய்யும் அல்லது ஊக்குவிக்கும் எந்தவொரு நபரும் கைது பிடியாணை இல்லாமல் கைது செய்யப்படலாம் எனவும் ஏற்பாடுகளை கொண்டுள்ளது

எனவே, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மேற்குறித்த பகிடிவதை சம்பவம் தொடர்பில் உடனடி சட்ட நடவடிக்கை எடுத்து அது தொடர்பிலான அறிக்கையை எதிர்வரும் 04.04.2025 இற்கு முன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய காரியாலயத்துக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாணம் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**யாழ். பல்கலை...**

அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"எமது பீடத்தைச் சேர்ந்த புதுமுக மாணவன் ஒருவர் சிரேஷ்ட மாணவர்களால் தாக்கப்பட்டமை தொடர்பில் நாம் மிகுந்த வருத்தமடைகின்றோம். சம்பவம் தொடர்பாக அறிந்தவுடன் பல்கலைக்கழக சட்ட நிறைவேற்று அதிகாரி, மாணவர் ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருடன் நானும் வைத்திய சாலைக்குச் சென்று பாதிக்கப்பட்ட மாணவனை நேரில் பார்வையிட்டதுடன், வைத்திய நிபுணர்களிடமும் கலந்துரையாடினோம்.




பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோரிடமிருந்தும், மாணவனிடமிருந்தும் பெறப்பட்ட முதற்கட்டத் தகவலின் அடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த நான்கு சிரேஷ்ட மாணவர்களுக்கு உடனடியாகச் செயற்படும் வகையில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. துணைவேந்தரின் அறிவுறுத்தலுக்கமைய மூன்று பேர் கொண்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பகிடிவதை மற்றும் மாணவர் ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் சுற்றறிக்கை, பல்கலைக்கழக உபவிதிகளுக்கு அமைய, கிடைக்கப் பெறும் விசாரணைக்குழுவின் பரிந்துரைகள் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் ஊடாகப் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். பேரவைத் தீர்மானத்துக்கமைய குற்றமிழைத்த மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், சம்பவம் பல்கலைக்கழகத்துக்கு வெளியே இடம்பெற்றிருப்பதனால் பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தை வழங்கிய முறைப்பாடுகளுக்கமைய பொலிஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்குப் பல்கலைக்கழகம் பூரண ஒத்துழைப்பை வழங்கும்" – என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# செயலில் காட்டுங்கள்!

ஊழல், முறைகேடுகளின் மூலம் சம்பாதிக்கப்பட்ட சட்டவிரோத சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கு வசதியாக புதிய சட்டங்கள் விரைவில் இயற்றப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சமீபத்தில் நடந்த தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்திருக்கின்றார்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நெருங்கி வருவதால், அரசாங்கம் மீண்டும் தனது ஊழல் எதிர்ப்புப் பிரசாரத்தைத் தூக்கிப் பிடித்துத் தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளது என்று தெரிகின்றது.

ஊழல், முறைகேடுகளைக் கையாள வலுவான பற்களைக் கொண்ட சட்டங்கள் தவிர்க்க முடியாதவைதான். ஆயினும், வெறுமனே ஊழல், முறைகேடுகளுக்கு எதிரான தேர்தல் பாணி பிரசாரக் கோஷங்களும் வெறும் சட்டங்களும் ஊழல், முறைகேடுகளை ஒழித்து விட மாட்டா என்பதுதான் நிஜம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி முன்வைத்த பிரதான கோஷமே ஊழல், முறைகேடுகளை ஒழித்தல் என்ற விவகாரம்தான். இன்னமும் அது வெறும் தேர்தல் கோஷமாகத்தான் இருக்கின்றதே தவிர, நடைமுறையில் பலன் தந்ததாக இல்லை என்பதுதான் நாட்டு மக்களின் பட்டறிவு.

நிறைவேற்றதிகாரத்தை தமது கைகளில் அநுரகுமார திஸநாயக்கா எடுத்து ஆறு மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் கடந்த கால ஊழல், மோசடிகள், முறைகேடுகள் தொடர்பில் காத்திரமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக மக்களுக்குத் தெரியவில்லை.

சில சமயங்களில் 'புதுத்தும்புக்கட்டை நன்கு கூட்டும்' என்ற அடிப்படையில் புதிய அரசு தான் ஊழல், மோசடியில் ஈடுபடுவதைத் தவிர்த்து இருப்பதாகக் காட்டக்கூடும். ஆனால் பழைய ஊழல், மோசடிகள், முறைகேடுகள் தொடர்பில் - நாட்டை இந்த மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிய அவலமான ஆட்சி முறைகேடுகள் தொடர்பில் - நடவடிக்கை எதுவும் இதுவரைக் காத்திரமாக எடுக்கப்படவில்லை என்பது தான் உண்மை.

புதிய சட்டங்களை கொண்டு வருவதாக ஆரவாரம் செய்தாலும், அவற்றின் மூலம் கடந்த கால தவறுகளை உரிய முறையில் இந்த அரசினால் அம்பலப்படுத்தவோ, பொறுப்பு கூறலை நடைமுறைப்படுத்தும் விதத்தில் குற்றம் இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவோ இயலும் என்று தெரியவில்லை.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் இது விடயத்தில் அதிகம் வெட்டிக் கிழித்துப் பேசிய மக்கள் சக்தியினர், அதிகாரம் கைகளுக்கு கிடைத்த பின்னர் பழைய அபவாதப் பேச்சுக்களையே தொடர்ந்தும் பேசிக் கொண்டிருக்கிறார்களே தவிர, நடைமுறையில் ஊழல், முறைகேடுகளில் ஈடுபட்டவர்களை அம்பலப்படுத்தி, சட்டத்தின் முன்நிறுத்தி, கம்பி எண்ண வைப்பது தொடர்பில் காத்திரமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவே இல்லை என்றுதான் மக்கள் கருதுகிறார்கள்.

ஊழல், முறைகேடுகள் கலாச்சாரத்தில் ஊறிப்போன இலங்கையில் அந்த அடாவடித்தனங்களை ஒழிப்பது இலகுவானது அல்ல. சட்டத்தையும் ஒழுங்கையும் இரும்புக் கரம் கொண்டு நடைமுறைப்படுத்தினால் மட்டுமே - சம்பந்தப்பட்ட தரப்புகள் தொடர்பில் தயவு, தாட்சண்யம் காட்டாமல் நடவடிக்கை எடுக்க ஆட்சிப் பீடம் தயாராக இருந்தால் மாத்திரமே - இவ்விடயத்தில் சற்றேனும் முன் நகர முடியும்.

ஜனவரி மாதம் கொழும்பு துறைமுகத்தில் இருந்து 323 சரக்கு கொள்கலன்கள் உரிய சோதனையின்றி சட்டவிரோதமாக நாட்டுக்குள் எடுத்துச் செல்லப்பட்ட விடயம் போன்ற பெரும் ஊழல்கள் இந்த ஆட்சியிலும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

ஏதோ புதிய சட்டங்கள் இல்லாதமையால் சரியான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க முடியவில்லை என்ற சாரப் பட தேசிய மக்கள் சக்தியினர் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றனர். சட்டங்களை உருவாக்குவதற்கு தேவையான போதிய நாடாளுமன்ற பலத்தை மக்கள் அரசுத் தரப்புக்கு வழங்கி இருக்கிறார்கள். மக்களின் அந்த ஆதரவை வைத்து செயலில் விடயங்களை நிரூபித்துக் காட்டுவதுதான் தேசிய மக்கள் கட்சியின் இப்போதைய பொறுப்பு. காலத்தை இழுத்தடித்து விட்டு பின்னர் சமாதானம் சொல்வதில் அர்த்தம் இல்லை.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE




# பேரினவாத கட்சிகளுக்கு வாக்களிக்காமல் எமது இருப்பை பாதுகாக்க முன்வாருங்கள்!

## கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

காரைதீவு மண் என்பது அழிவின் விளிம்பில் இருக்கின்றது. தேசிய கட்சிகள் காரைதீவு பிரதேச சபையை இந்த முறை தமிழர்கள் கைப்பற்றக்கூடாது எனக் கூறி எம்மில் சிலரை மூளைச்சலவை செய்து தமிழரசுக்கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என கூறுகின்றார்கள். வடக்கு, கிழக்கில் முதல் முதலாக திருவுளச் சீட்டின் ஊடாக காரைதீவு பிரதேச சபையைத் தமிழரசுக்கட்சி கைப்பற்றியதை எல்லோரும் அறிவோம்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவுக் கிளைத் தலைவரும் முன்னாள் தவிசாளரும் இந்நாள் வேட்பாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் காரைதீவு கிளை தலைமையிலான பிரதேச சபை வேட்பாளர் அறிமுக நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(30) விவேகானந்தா விளையாட்டுக் கழக மண்டபத்தில் நடைபெற்றவேளை அங்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உண்மையில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலவற்றை பேசி இருந்தாலும் எமது மண்ணுக்கு அவை மிகவும் பொருத்தமானவையாகும். எமது காரைதீவு மண் என்பது அழிவின் விளிம்பில் இருக்கின்றது என்பதை அனைத்து பிரதேச வாழ் மக்கள் உணர்ந்து கொண்டு வாக்களிக்க வேண்டிய தார்மீக பொறுப்பில் இருக்கின்றீர்கள்.

மொத்தமாகக் காரைதீவு பிரதேச சபையில் 7 வட்டாரங்கள் உள்ளடங்குகின்றன.

தமிழர்கள் தமிழர்களுக்கு வாக்குகளை அளிக்கின்றார்கள்.ஆனால் இன்று சில தேசிய கட்சிகள் காரைதீவு பிரதேச சபையை இந்த முறை தமிழர்கள் கைப்பற்றக் கூடாது எனக் கூறி எம்மில் சிலரை மூளைச்சலவை செய்து தமிழரசுக்கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என கூறுகின்றார்கள்.

வடகிழக்கில் முதல் முதலாக திருவுளச்சீட்டின் ஊடாக காரைதீவு பிரதேச சபையினை தமிழரசுக்கட்சி கைப்பற்றியதை எல்லோரும் அறிவோம். எனவே தான் பேரினவாத கட்சிகளுக்கு வாக்களிக்காமல் எமது இருப்பை தக்கவைப்பதற்காக சரியான வழிகாட்டல்களை வழங்கி உரிய அரசியல் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக வெற்றி பெற முடியும். இல்லாவிடின் மரண வீடு முதல் இதர செயற்பாடுகளுக்கும் தமிழன் மண்டியிட வேண்டும்.

62 வீதம் உள்ள நாங்கள் ஆட்சி அமைப்பதா? அல்லது மற்றவர்களுக்கு தாரை வார்ப்பதா என்பதை இதை காரைதீவு புத்திஜீவிகள் உள்ளம் சார்ந்து சிந்தித்து செயற்படாவிடின் வரலாற்று துரோகம் மற்றும் பிழைகளை விட்டவர்களாக மாற நேரிடும்.

சலுகைகள் ஆசை வார்த்தைகள் வேலை வாய்ப்புக்கள் எனப் பொய் கூறி வருபவர்களை விரட்டி அடியுங்கள். எமக்கு தூய்மையான உண்மையாக எம் மண்ணை நாங்கள் ஆழ்வதற்கு நீங்கள் அனைவரும் வீட்டுக்கு வாக்களியுங்கள்.– என்றார்.

காரைதீவு இலங்கை தமிழரசுக் கட்சிக் கிளைச் செயலாளர் கதிர்காமத்தம்பி செல்வபிரகாஷ் தலைமை தாங்கினார். இலங்கை தமிழரசுக் கட்சி காரைதீவு பிரதேச சபை வேட்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




# எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தமிழர்கள் தெற்கு கட்சிகளுக்கு வாக்களிக்கக் வேண்டாம்

## காரைதீவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் முழக்கம்

(வி.ரி.சகாதேவராஜா)

பட்டுவேட்டிக்கு கனவு கண்டு, கட்டியிருந்த கோவணத்தை இழந்த நிலை தான் இன்று ஈழத்தமிழர்களின் நிலை. நீலமும் பச்சையும் மாறி மாறி ஏமாற்றிய காலம் போய், இன்று சிவப்பும் ஏமாற்ற புறப்பட்டிருக்கிறது. எனவே எந்தக்காரணம் கொண்டும் தென்னிலங்கை பேரினவாத கட்சிகளுக்கு தமிழர்கள் ஒருபோதும் வாக்களிக்கக் கூடாது.

இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் பேசிய மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுத்தலைவருமான ஞானமுத்து ஸ்ரீநசன் தெரிவித்தார் .

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எமக்குப் பாதுகாப்பு இல்லை. வாகனம் இல்லை. ஏன் ஆறுதல் பரிசாக இருக்கக்கூடிய 10 மில்லியன் ரூபா வரவு செலவுத் திட்ட நிதி கூட இல்லை. இதுதான் எமது சமகால நிலைவரம் .

கடந்த ஆறு மாத காலத்தில் தாங்கள் யார் என்பதை இன்றைய அரசு தெட்டத் தெளிவாகக் காட்டி இருக்கின்றது. இனியும் அவர்களை நம்ப முடியுமா?

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தலில் நீலம் பச்சை கட்சிகளில் வெறுப்படைந்த தமிழர்கள் ஏதோ ஒரு வகையில் சிவப்பு கட்சிக்கு வாக்களித்தார்கள். ஆனால், அந்தச் சிவப்புக் கட்சி இன்று தமிழர்களை 100 வீதம் ஏமாற்றி வருவதை நீங்கள் அறிய வேண்டும்.

உதாரணமாக அவர்கள் கொண்டு வந்த கிளின் ஸ்ரீலங்கா இலங்கை சுத்தப்படுத்தும் திட்டத்தில் 18 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அதில் ஒருவராவது தமிழர் இல்லை. பல்லின நாடு என்கின்றார்கள். நாங்கள் இனவாத மதவாதமற்ற பேதமற்ற அரசு என்கிறார்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் ஆறு அரச தமிழ் எம்பிக்களை வைத்துக்கொண்டு இப்படியான இனவாதத்தை செய்கிறார்கள்.

இதேபோன்று பரீட்சைகளை மேற்பார்வை செய்யும் குழுவில் 7 பேரை நியமித்தார்கள். அதில் ஆறு பேர் சிங்களவர் ஒருவர் முஸ்லிம். அதில் கூட ஒரு தமிழரும் இல்லை .

மயிலியதனை, மாதவனை மேய்ச்சல் தரைப் பிரதேசங்களில் பொலநறுவை, அம்பாறை சிங்கள மக்கள் சட்ட விரோதமாக குடியேறி இருக்கின்றார்கள் அவர்கள் வெளியேற வேண்டும் என்று நீதிமன்றம் கூறிய போதும் தொடர்ந்து வரும் ஆட்சியாளர்கள் அதனை கவனத்தில் எடுக்கவில்லை.

அதேபோன்று கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்திலும் இதே நிலைமைதான் .

கிழக்கு பல்கலைக்கழக உயர் பீட பேரவையிலே 15 பேர் இருக்கின்றார்கள். அப்போது இதே பேரவையில் 9 தமிழர்கள் நான்கு முஸ்லிம்கள் இரண்டு சிங்களவர்கள் இருந்தார்கள் .

நாம் ஜனாதிபதி தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலில் ஏதோ அவர்களை ஆதரித்தோம். ஆனால் உள்ளூராட்சியில் அப்படி ஆதரித்தால் எமது அடையாளமே இல்லாமல் போகும்.

சில வேளை உள்ளூராட்சித் தேர்தலிலும் இந்தச் சிவப்புக்கட்சி வெற்றி பெறுமாக இருந்தால் மூன்று தேர்தல்களிலும் தமிழர்கள் எமக்கு ஆதரவளித்து இருக்கின்றார்கள் என்று கூறி மேலும் ஏறி மிதிக்க வருவார்கள்.

நாளை நாங்கள் ஒன்றுமே கேட்க முடியாது. சுயநிர்ணய உரிமையை கேட்க முடியாது. வடகிழக்கு இணைப்பை கேட்க முடியாது . சுயாட்சியை கேட்க முடியாது. ஏன் தாயகம் ஒன்று சொல்லையே பயன்படுத்த முடியாது போகலாம். எனவே சிந்தித்து செயல்பட வேண்டும்.- என்றார்.

# 10 கிராம் ஐஸ் போதை பொருளுடன் காத்தான்குடியில் ஒருவர் கைதானார்

**(கனகராசா சரவணன்)**

கொழும்பில் இருந்து காத்தான்குடிக்கு வியாபாரத்துக்காக 10 கிராம் ஐஸ்போதை பொருளை எடுத்துவந்த காத்தான்குடியைச் சேர்ந்த போதை பொருள் வியாபாரி ஒருவரை நேற்று திங்கட்கிழமை (31) இரவு கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து கொழும்பில் இருந்து 10 கிராம் 33 மில்லிக்கிராம் ஐஸ் போதை பொருளை எடுத்து கொண்டு வந்த வியாபாரி ஒருவரை சம்பவதினமான நேற்று இரவு காத்தான்குடி பிரதேசத்தில் வைத்துக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை நீதி மன்றல் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் வருடாந்தத் திருவிழா இன்று ஆரம்பம்!

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கிலங்கையின் முதன்மை சக்தி பீடமாய் அமைந்து, தெட்ஷணகைலாசம் என்னும் திருக்கோணமலையில் அருளாட்சி புரியும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பிரமோற்ஸவம் இன்று (01) செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து எதிர்வரும் 10 நாள்கள் திருவிழா இடம்பெறும்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்ற நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழா இடம் பெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இரவு கொடியிறக்கமும் இடம் பெறும்.


மறுநாள் சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் திருவிழா நிறைவுபெறும்.

தினமும் காலை 5.30 மணிக்கு அபிஷேகம், காலை 7 மணிக்கு மூலஸ்தான பூஜை, 7.45 மணிக்கு தம்ப பூஜை, 8.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையுடன் 10 மணிக்கு காலைத் திருவிழா நிறைவடையும்.

பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம், 3.30 மணிக்கு மூலஸ்தான பூஜை, மாலை 4.15 மணிக்கு தம்பபூஜை, மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூஜை இடம்பெற்று 7.30 மணிக்கு மாலைத் திருவிழா நிறைவு பெறும்.







EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# மூளாய் முருகனுக்கு கொடியேற்றம்!

(வடமராட்சி நிருபர்)

மூளாய் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலய திருவிழா நாளை (02) புதன் கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும்.

5 ஆம் திருவிழா 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும், 6 ஆம் திருவிழா 7 ஆம் திகதி திங்கட்கிழமை மஞ்சமும், 9 ஆம் திருவிழா 10 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் பங்குனி உத்திர நன்னாளில் தீர்த்தமும் நடைபெறும்.





# குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நினைவாக உலக நாடக தின விழா

(எஸ்.நிதர்ஷன்)

உலக நாடக தினத்தை முன்னிட்டு நாடக ஆளுமை குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நினைவாக சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தால் உலக நாடக தின விழா சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தில் நடத்தப்பட்டது.

இதன்போது குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நினைவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி இடம்பெற்றது. தொடர்ந்து நினைவுரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் க.ரதிதரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து நாடக அரங்க கல்லூரியின் "தான் விரும்பாத் தியாகி", சண்டிலிப்பாய் காலசார மத்திய நிலைய மாணவர்களின் "கற்று உணர்வோம்", கூத்தாட்டு அவைக்கழகத்தின் "பட்டறிவு", ரவர் நாடக அரங்க கற்கை நெறி முதலாம் வருட மாணவர்களின் "வசந்தன் கூத்து" , செம்முகம் ஆற்றுகை குழுவின் "எங்கே எங்கே குடை எங்கே", வடலியடைப்பு கலைவாணி கலைமன்றத்தின் "வார்த்தைகளற்ற நடன நாடகம்" , சண் நாடக குழுவின் "முட்டை" ஆகிய 7 நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.

இதன்போது சண்டிலிப்பாய் கலாசார உத்தியோகத்தர் யாழினி யோகஸ்வரன், யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், நாடக ஆசிரியர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.








# வீதிகளது விவரங்களை கோரும் மட்டு. மாநகர சபை

**(பழுவூரான், கல்லடிச் செய்தியாளர்)**

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உரிய, புதிய வீதிகளை அமைத்தல், வீதிகளைத் திருத்தியமைத்தல் தொடர்பான தங்களது வேண்டுகோள்களை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது எதிர்காலத்தில் வீதிகளை அமைத்தல் தொடர்பான திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்கு உதவியாக அமையும் என்பதால் சரியான தகவல்களைஅனுப்புமாறும் மட்டக்களப்பு மாநகர சபை பொது மக்களிடம் விடுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.






# மறைந்த ஊடகவியலாளர் பாரதிக்கு சுவிஸில் நடந்த அஞ்சலி கூட்டம்

தமிழ் ஊடகப் பரப்பில் தனக்கெனத் தனி இடம் பதித்த மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளரான இராஜநாயகம் பாரதிக்கான அஞ்சலி கூட்டம் ஒன்று சுவிட்சர்லாந்தில் நடைபெற்றுள்ளது.

நிகழ்வானது நேற்று முன்தினம் (30) சுவிஸ் தமிழ் ஊடக மையத்தின் ஏற்பாட்டில் லுட்சேர்ன் மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் சுவிட்சர்லாந்தில் வசிக்கும் மூத்த ஊடகவியலாளர்கள் பலருடன் இளம் ஊடகவியளாளர்களும் கலந்து கொண்டனர்.

கனகரவி மற்றும் வேதநாயகம் போன்ற மூத்த ஊடகவியளாளர்களும் இளம் ஊடகவியளாளர்கள், பல ஊடக ஆர்வலர்கள் மற்றும் சுயாதீன ஊடகவியளார்கள் பலரும் கலந்துகொண்டனர்.

ஊடகவியலாளரான பாரதி இராஜநாயகம் உடல்நலம் பாதிக்கப்பட்டு கடந்த பெப்ரவரி 09 ஆம் திகதி தனது 62 ஆவது யாழ்ப்பாணத்தில் காலமானார். மூத்த ஊடகவியலாளரான இவர் சுமார் 40 வருடங்களுக்கும் மேற்பட்ட ஊடகத்துறை அனுபவத்தை கொண்டவராவார்.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான பாரதி, கொழும்பில் சிங்கள ஊடக அமைப்புகளுடன் இணைந்து 2000 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஆம் ஆண்டுவரை பணியாற்றியிருந்தார்.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஈழநாடு நாளிதழின் பிரதம ஆசிரியராக ஒரு வருடம் கடமை புரிந்தார்.

35 ஆண்டுகளின் பின்னர் கொழும்பில் இருந்து மீண்டும் யாழ்ப்பாணம் சென்ற பாரதி, தனது சொந்த மண்ணில் உயிரிழக்கும் வரை வீரகேசரியின் வடபிராந்திய ஆசிரியராக பணியாற்றியிருந்தார்.









# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் பெண்ணின் சடலம் இன்று மீட்பு!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் இன்று (01) மிதந்த நிலையில் இளம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரப்பத்தனை, போர்ட்மோர் தோட்டத்தைச் சேர்ந்த காளிமுத்து மகாலெட்சுமி (வயது – 22) என்பவரது சடலம் அது என்று அவரது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் மிதந்த நிலையில் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

நுவரெலியா நீதிவான் சம்பவ இடத்துக்கு வருகைத் தந்து நடத்திய விசாரணையைத் தொடர்ந்து, தடயவியல் பிரேத பரிசோதனைக்காக உடலை நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.





# காரைதீவு கண்ணகி அம்மனின் திருவிழா நாளை ஆரம்பம்!

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்திரத் திருவிழா நாளை (02) புதன்கிழமை ஆரம்பமாகிறது.

இந்தத்திருவிழா பகல், இரவுத்திருவிழாக்களாக 09 தினங்கள் இடம்பெற்று பத்தாம் நாள் தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும் என்று ஆலய தர்மகர்த்தா இரா.குணசிங்கம் தெரிவித்தார்.

பிரபல கதாப்பிரசங்கியும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் உதவிப் பணிப்பாளரும், கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவின் முன்னாள் உதவிப் பணிப்பாளருமான கலைமாமணி கலாபூஷணம் எம்.எஸ். ஸ்ரீ தயாளன் முதல் ஐந்து தினங்கள் கதாப்பிரசங்கம் நிகழ்த்தவுள்ளார். இவரது கதாகாலாட்சேபம் தினமும் இரவுத் திருவிழாவின்போது இடம்பெறும்.





# மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகம் நடத்திய ‘பொழுதொன்றில் கூடல்’ நிகழ்வு!

(பழுவூரான்)

மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகம் நடத்திய “பொழுதொன்றில் கூடல்” நிகழ்வு இன்று திங்கட்கிழமை (01) மட்டக்களப்பு அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசார உத்தியோகத்தர் தங்கராசா மலர்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தொலைக்காட்சித் தொடர்களும், திரைப்படங்களும் போக்கும், சவாலும் என்னும் தலைப்பில் சிங்கள நாடக, தொலைக்காட்சி, திரைப்பட இயக்குநர் சுனில் கொஸ்தாவும், நாடக நடிப்பு முறைமை பற்றி நாடக திரைக்கலைஞர் காளியும் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# அனர்த்தங்களுக்குக் கவலை தெரிவிக்கும் பொருட்டு மியன்மார், தாய்லாந்து தூதரகங்களுக்கு சஜித்!

மியன்மார் மற்றும் தாய்லாந்தில் நடந்த மிக மோசமான இயற்கை பேரழிவுக்குக் கவலை தெரிவிக்கும் பொருட்டு எதிர்க்கட்சித் தலைவர் மியன்மார் மற்றும் தாய்லாந்து தூத ரகங்களுக்கு விஜயம் செய்துள்ளார்.

மியன்மார் மற்றும் தாய்லாந்தில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தால் அங்கு ஏராளமான சொத்துக்கள் அழிந்தன. பல உயிர் பலிகளும் ஏற் பட்டன.

இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (01) கொழும்பிலுள்ள மியன்மார் மற்றும் தாய்லாந்து தூதரகங்களுக்கு விஜயம் செய்து இந்த அனர்த்தம் தொடர்பாகத் தனது வருத்தத்தையும் கவலையையும்



தெரிவித்தார்.

மியன்மார் மற்றும் தாய்லாந்து தூதுவர்கள் தலைமையிலான தூ துக்குழுவினரைச் சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் ஆறுதல் தெரிவித்தார்.

ஒரு நாடு என்ற வகையில் மியன் மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குத் தேவையான பூரண ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவேன் என்று அவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# ஜார்க்கண்ட்டில் 2 சரக்கு ரயில்கள் மோதி விபத்து; இருவர் உயிரிழப்பு



ஜார்க்கண்டில் 2 சரக்கு ரயில்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில், 2 ஓட்டுநர்கள் உயிரிழந்துள்ளனர். 4 பேர் காயமடைந்துள்ளனர்.

ஜார்க்கண்டின் சாஹேப்கஞ்ச் மாவட்டத்தில் உள்ள பர்ஹைட் காவல் நிலையப் பகுதிக்கு உட்பட்ட போக்னாதி அருகே நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணி அளவில் இந்த விபத்து நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து நடந்த ரயில் தண்ட வாளமும், ரயில்களும் மின்சார உற்பத்தி நிறுவனமான என்.டி.பி.சிக்குச் சொந்தமானவை என்பது தெரிய வந்துள்ளது.

பிஹாரின் பாகல்பூர் மாவட்டத்தில் உள்ள என்.டி.பி.சியின் கஹல்கான் சூப்பர் அனல் மின் நிலையத்தையும் மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் உள்ள ஃபராக்கா மின் நிலையத்தையும் இந்த ரயில் பாதை இணைக்கிறது. இவை முக்கியமாக அதன் மின் உற்பத்தி நிலையங்களுக்கு நிலக்கரியைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

விபத்து குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கிழக்கு ரயில்வே செய்தித் தொடர்பாளர் கௌசிக் மித்ரா, "சரக்கு ரயில்கள் மற்றும் தண்டவாளம் இரண்டும் NTPC-க்கு சொந்தமானவை. இதற்கும் இந்திய ரயில்வேக்கும் எந்த தொடர்பும் இல்லை." என தெரிவித்தார்.

# அ.தி.மு.க, பா.ஜ.க, த.வெ.க. இடையே இரண்டாம் இடத்துக்குத்தான் போட்டி



## திருமாவளவன் தெரிவிப்பு

அ.தி.மு.க, பா.ஜ.க. மற்றும் த.வெ.க. இடையே இரண்டாம் இடத்துக்குத்தான் போட்டி நிலவுகின்றது என திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்த த.வெ.க முதல் பொதுக்குழுக் கூட்டத்தில் அவர் பேசுகையில், அ.தி.மு.க.-பா.ஜ.க. தமிழகத்தில் இரண்டாவது பெரிய கட்சியாக இருக்க முடியாது. த.வெ.கதான் இரண்டாவது பெரிய கட்சி என்று கூறியுள்ளார்.

எனவே, பா.ஜ.க, அ.தி.மு.க. மற்றும் த.வெ.க. ஆகிய கட்சிகளுக்கிடையே தமிழகத்தில் இரண்டாவது கட்சி யார் என்பதில் தான் போட்டி நடந்து கொண்டிருக்கிறது. இந்தச்சூழலில் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் என்பது நகைச்சுவையாக இருக்கிறது என்று வி.சி.க. தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் விசிக தலைவர் திருமாவளவன் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், 2026 இல் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா, தனது சமூக ஊடகங்களில் தொடர்ந்து பதிவு செய்து வருவது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர்,

"வட இந்தியாவில் ஏதாவது ஒரு மாநிலத்திலே வரும் என்ற எண்ணத்தில் அமித்ஷா கூறியிருப்பார். தமிழகத்தில் அதற்கான வாய்ப்பே இல்லை என்பது அவருக்கேத் தெரியும்.

இன்னும் எதிர்க்கட்சிகள் தமிழகத்தில் உறுதியான எந்த நிலைப்பாட்டையும் எடுக்கமுடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. அ.தி.மு.கவும் இன்னும் ஒரு அணியை உருவாக்கவில்லை. பா.ஜ.கவும் இன்னும் ஒரு அணியை உருவாக்க முடியவில்லை. புதிதாக கட்சித் தொடங்கியிருக்கிற நடிகர் விஜய்யும் ஒரு உறுதியா நிலைப்பாட்டை எடுத்ததாக தெரியவில்லை.

அண்மையில் நடந்த த.வெ.க. முதல் பொதுக்குழுக் கூட்டத்தில் அவர் பேசியபோது, அ.தி.மு.க. - பா.ஜ.க. தமிழகத்தில் இரண்டாவது பெரிய கட்சியாக இருக்க முடியாது. த.வெ.கதான் இரண்டாவது பெரிய கட்சி என்றே கூறியுள்ளார். எனவே, பா.ஜ.க, அ.தி.மு.க. மற்றும் த.வெ.க. ஆகிய கட்சிகளுக்கிடையே தமிழகத்தில் இரண்டாவது பெரிய கட்சி யார் என்பதில் தான் போட்டி நடந்து கொண்டிருக்கிறது. இந்தச்சூழலில் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் என்பது நகைச்சுவையாக இருக்கிறது" என்று அவர் கூறினார்.

மேலும், "மகராஷ்டிரா மாநிலத்தை வட இந்தியாவோடு பார்ப்பதில்லை. அதுவும் கிட்டத்தட்ட தென்னிந்தியாவோடுதான் இருக்கிறது. தாய்மொழி உணர்வு இப்போதுதான் தமிழகத்தைத் தாண்டி பலருக்கும் உருவாகி வருகிறது. இந்தி திணிப்பை அவர்கள் இதுவரை ஒரு எதிரான நடவடிக்கையாகவே பார்க்காமல் இருந்து விட்டனர். அதனால், வடஇந்தியாவில் பூர்வக்குடி மக்கள் பேசிய பல மொழிகள் அழிந்துப் போயிருக்கின்றன.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில்கூட தங்களது தாய்மொழி இந்தியால் அழிக்கப்பட்டுவிட்டது என்று, சட்டமன்றத்திலேயே பேசக்கூடிய அளவுக்கு தற்போது மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறன. இதற்கெல்லாம் தமிழகம்தான் ஒரு முன்னோடி மாநிலமாக இருக்கிறது என்பதை, இப்போது வெவ்வேறு மாநிங்களில் உள்ள மக்களுக்குப் புரியத் தொடங்கியிருக்கிறது." என்றார்.




# நில அதிர்வால் 3 லட்சம் பேர் பலியாகலாம்; ஜப்பான் எச்சரிக்கை

ஜப்பான் அரசாங்கம் அதன் பசுபிக் கடற்கரையில் 9 மெக்னிடியூட் அளவிற்கு பாரிய நில அதிர்வு ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரித்து புதிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதனால் பேரழிவு தரும் ஆழிப் பேரலையும் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நில அதிர்வால் கட்டடங்கள் இடிந்து விழும், சுமார் 3,00,000 பேர் உயிரிழக்க நேரிடும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நில அதிர்வு ஏற்படுமாயின் 1.81 டிரில்லியன் டொலர் பொருளாதார இழப்புகள் ஏற்படக்கூடும் என்றும், இது ஜப்பானின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்டப் பாதி என்றும் மதிப்பிடப்படுகிறது.

அடுத்த நூற்றாண்டில் இந்த பிராந்தியத்தில் 8 முதல் 9 மெக்னிடியூட் அளவிலான நில அதிர்வு ஏற்படுவதற்கு 80 சதவீதம் வாய்ப்பு உள்ளதாக ஜப்பான் அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

திருத்தப்பட்ட பேரழிவு தாக்க மதிப்பீடுகள் பணவீக்க அழுத்தங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட நிலப்பரப்பு தரவுகளை அடிப்படையாகக் கொண்டே ஜப்பான் அரசாங்கம் இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த அறிக்கையின்படி குளிர்கால இரவுகளில் நில அதிர்வு ஏற்பட்டால், ஆழிப்பேரலை மற்றும் கட்டமைப்பு இடிபாடுகளால் 2,98,000 பேர் வரை உயிரிழக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சுமார் 1.23 மில்லியன் மக்கள் வெளியேறுவதற்கான வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அழுத்தம் காரணமாக, 100 முதல் 150 ஆண்டுகளுக்கு ஒரு முறை நில அதிர்வு ஏற்படக்கூடும். மேலும், 2011 ஆம் ஆண்டில், 9 மெக்னிடியூட் அளவிலான நில அதிர்வால் ஆழிப் பேரலை ஏற்பட்டது.



# மலேசியாவில் எரிவாயு குழாய் வெடித்ததால் பாரிய தீ விபத்து

மலேசியாவின் சிலாங்கூர் மாநிலத்தின் புத்ரா ஹைட்ஸில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

ஒரு எரிபொருள் நிலையத்திற்கு அருகில் எரிவாயு குழாய் வெடித்ததால் இந்த தீ விபத்து ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அப்பகுதியிலுள்ளவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு அந்நாட்டுப் பாதுகாப்புப் படையினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 01/04/2025

## போலி நாணயத் தாள் பயன்படுத்தியவர் கைது

டொரோண்டோவைச் சேர்ந்த ஒருவர், டர்ஹாம் பகுதியில் போலி பணம் பயன்படுத்தி பொருள்கள் கொள்வனவு செய்தமைக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

02▶




# ஜேர்மனியிலிருந்து கனடாவுக்கு ஆதரவு

**ட்ரம்பால் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள கனடாவுக்கு ஆதரவாக ஜேர்மனியிலிருந்து ஆதரவு குரல் எழுப்பப்பட்டுள்ளது.**

**அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக ஆக்கப்போவதாக தொடர்ந்து மிரட்டிவரும் நிலையில், ஜேர்மன் சேன்ஸலரான ஓலாஃப் ஷோல்ஸ், கனடாவுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளார்.**

**கனடா எந்த நாட்டின் மாகாணமும் அல்ல என்று கூறியுள்ள ஷோல்ஸ், கனடா பெருமை மிக்க ஒரு சுதந்திர நாடு என்றும் கூறியுள்ளார்.**

கனடாவுக்கு உலகம் முழுவதும் நண்பர்கள் இருக்கிறார்கள் என்று கூறியுள்ள ஷோல்ஸ், குறிப்பாக, ஜேர்மனியிலும் அமெரிக்காவிலும் கனடாவுக்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள் என்றும் கூறியுள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகத்தின் ஐரோப்பா மீதான வரி விதிப்பு திட்டங்கள் குறித்து விமர்சித்த ஷோல்ஸ், அப்படி அமெரிக்கா வரிகள் விதிக்குமானால், அது பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கே வழிவகுக்கும் என்றும், அதனால் இருதரப்புக்கும் பாதிப்புகள் ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

# கனடாவில் அதிக எண்ணிக்கையில் வீடுகள் நிர்மானிக்கப்படும்; கார்னி



கனடாவில் அதிக எண்ணிக்கையில் வீடுகள் நிர்மானிக்கப்படும் என லிபரல் கட்சி தலைவர் மார்க் கார்னி உறுதி அளித்துள்ளார்.

வீடுகளின் கட்டுமானத்தை இரண்டு மடங்கு வேகத்தில், ஆண்டுக்கு சுமார் 500,000 புதிய வீடுகள் கட்டத் திட்டமிடுவதாக முன்மொழிந்துள்ளார்.

இது இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்னர் வேகாக கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

02▶



# கனடாவில் 2 லட்சம் பேருக்கு தற்காலிக வேலைவாய்ப்புகள்

கனடாவில் இரண்டு லட்சம் பேருக்கு தற்காலிக வேலைவாய்ப்புகள் வழங்கப்பட உள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வழங்கப்படவுள்ள வேலையிற்கு குறைந்தபட்ச ஊதியம் மணித்தியாலம் ஒன்றுக்கு 20 டொலர்கள் என தெரிசவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்புகள் பொருளாதார நிலைமையை மேம்படுத்த விரும்பும் நபர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிபரல் கட்சியின் தலைவர் மார்க் கார்னி, கனடாவின் 24 ஆவது பிரதமராக பதவியேற்ற சில நாள்களில் திடீர் தேர்தல் அறிவித்தார்.

இதனை தொடர்ந்து, கன்சர்வேட்டிவ் தலைவர் பியர் பொய்லிவ்ரே, என்டிபி தலைவர் ஜக்மீத் சிங், கிரீன் கட்சி தலைவர்கள் எலிசபெத் மே மற்றும் ஜோனாதன் பெட்நோல்ட் உள்ளிட்டோர் நாடு முழுவதும் பிரசாரத்தில் இறங்கியுள்ளனர்.

பொதுத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 28 ஆம் திகதி நடைபெறும், முன்கூட்டிய வாக்குப்பதிவு ஏப்ரல் 18 முதல் 20 ஆம் திகதி வரையில் வரை நடைபெறும்.

இந்தநிலையில், தேர்தல் பணியில் ஈடுபடுவதற்காக இவ்வாறு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

01.தேர்தல் பணிகளில் ஈடுபடத் தேவையான தகுதிகள்

கனடா குடியுரிமை பெற்றவராக இருக்க வேண்டும்.

02. குறைந்தபட்சம் 16 வயது நிறைவு செய்ய வேண்டும்.

03. பணியின் போது எந்தவொரு அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது.

04.வாசிப்பு, எழுத்துத் திறன்கள், மக்கள் தொடர்புத் திறன், மாற்றுத் திறனாளிகளை உதவிக் காணும் திறன், கவனக்குறைவு இல்லாத தன்மை, மற்றும் வழிமுறைகளை பின்பற்றும் திறன் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




## போலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஜனவரி 8 ஆம் திகதி முதல் மார்ச் 14 ஆம் திகதி வரையில் இந்த மோசடிகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனவரி 8 முதல் மார்ச் 14 வரை, அந்த நபர் பல மின்னணு சாதனங்கள் மற்றும் உடை விற்பனை கடைகளில் போலி 100 டொலர் நாணயத் தாள்களை பயன்படுத்தி பொருள்கள் கொள்வனவு செய்துள்ளார்.

டர்ஹாம் பொலிஸார் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

சந்தேகநபர் கடைகளில் போலி 100 டொலர் நாணயத் தாள்களை கொடுத்து பொருள்கள் கொள்வனவு செய்துள்ளார்.

சில இடங்களில், கடை ஊழியர்கள் பணத்தை போலியானது எனக் கண்டு பிடித்து விற்பனையை மறுத்துள்ளனர். தொடர்ந்து நடந்த விசாரணையில், இது தொடர்பான மற்ற சம்பவங்களும் கண்டறியப்பட்டன.

டொரோண்டோவைச் சேர்ந்த 33 வயதான டெல்டன் பார்ச்மென்ட் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும், சந்தேக நபரிடமிருந்து 3,000 டொலர் மதிப்பிலான போலி பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

டர்ஹாம் மற்றும் கிரேட்டர் டொரோண்டோ பகுதியில் இன்னும் போலி பணம் பரவியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிபரல் அரசாங்கம் 'பில்ட் கனடா ஹோம்ஸ்' என்பதை உருவாக்கி, புதிய வீட்டு திட்டங்களில் உருவாக்குனராக செயல்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாஹன், ஒன்டேரியோவில் நடைபெற்ற பிரசாரத்தில் பிரதமர் கார்னி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

புதிய அணுகுமுறை மூலம் கூடுதல் எண்ணிக்கையிலான வீடுகளை நிர்மாணிக்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



# ஒன்டாரியோவில் மக்கள் மின்சாரமின்றி பாதிப்பு

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் கடந்த வாரம் பெய்த உறை மழையால் லட்சக்கணக்கான மக்கள் மின்சாரமின்றி தவித்து வருகின்றனர்.

பல்வேறு பகுதிகளில் மின்சாரத் துண்டிப்பு நீடிக்கலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. 396,000 வீடுகளுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திங்கள்கிழமை மாலை நிலவரப்படி 396,000 இற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என ஒன்டாரியோ மாகாண மின் வழங்கல் நிறுவனம் ஹைட்ரோ வன் தெரிவித்துள்ளது.

சில ஜோர்ஜியன் பே பகுதிகளில் வெள்ளிக்கிழமை வரை மின் விநியோகம் திரும்ப வாய்ப்பு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வார இறுதியில் தொடங்கிய புயலின் பின் 637,000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு மின்சாரம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

மின் விநியோகத்தை சீர் செய்யும் முனைப்புக்களில் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என மின்சார நிறுவனம் தெரிவித்துள்ளது.

பனிப்புயல் மற்றும் மரங்கள் முறிந்து வீழ்ந்த காரணத்தினால் பல இடங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# டொரோண்டோவில் எரிபொருள் விலை வீழ்ச்சி

டொரோண்டோ பெரும்பாக பகுதியில் எரிபொருள் விலை கணிசமாக குறைய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் கார்பன் வரி இனி அமுல்படுத்தப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய பிரதமர் மார்க் கார்னி, கூட்டாட்சி அரசு ஏப்ரலில் இருந்து கார்பன் வரியை நீக்குவதாக அறிவித்தார்.

இதனால் நாடு முழுவதும் எரிபொருள் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. டொரோண்டோ பெரும்பாக பகுதியில் எரிபொருள் விலை 20 சதங்களினால் குறையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் எரிபொருள் 1.57 சதங்களிலிருந்து 1.37 சதங்களாக குறைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கார்பன் வரி நீக்கமானது எரிபொருள் விலைகளில் சாதக மாற்றத்தை உருவாக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

